(4) நிதி அமைச்சரின் விளக்க உரை

தமிழக வறட்சிப் பகுதிகளை பார்வையிட இந்தியப் பிரதமரின் வருகை

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புடைய முதலமைச்சரவர்கள் டெல்லி நகரத்திற்கு, அவர்கள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதல் விஜயமாகப் போய இருப்பதை இந்த மாமன்றம் அறியும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இன்று காலையில் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு, நேற்று நம்முடைய மாண்புமிகு பிரதம அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களோடு, உணவு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களோடு, வெளிவிவகார அமைச்சர் திரு. தினேஷ் சிங் அவர்களோடு, உள்துறை அமைச்சர் திரு. சவான் அவர்களோடு பேசியதைக் கூறினார்கள். மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள், இங்கேயுள்ள வறட்சிப் பகுதிகளையெல்லாம் பார்வையிடுவதற்கு வருவதாகச் சொன்ன செய்தியை அவர்கள் கூறியதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்த மாதம் என்று கருதுகிறேன், அவர்கள் வருவதாக வாக்களித்திருக்கிறார்கள். இந்தத் தகவல்களை மாண்புமிகு முதலமைச்சரவர்களின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். உணவுத் துறை அமைச்சரவர்கள் முதல் தவணையாக 10,000 டன்கள் உணவுப் பொருள்களை அனுப்பி வைக்க, அரிசி கொடுக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். மேலும் கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் வற்புறுத்தி இருக்கிறார்கள். மாநிலத்தின் பிரச்சினையை விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்துக்கு வெளியிலே, தகவல்கள் பத்திரிகையில் மூலம் வந்தாலும் மரபு இருக்கிறது. இன்று காலையிலே முதலமைச்சர் அவர்கள் தொடர்பு கொண்டு நம்முடைய மன்றத்திற்கு அறிவிக்குமாறு கூறியிருக்கிறார்கள். அதை நான் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

(5) தகவல் கோரல்

82-வது விதியின்கீழ் அமைச்சர் ஆற்றிய உரைமீது விளக்கம் கோர எதிர்க்கட்சித் தலைவரின் உரிமை.

THIRU K. VINAYAKAM : Sir, arising out of the statement made by the Hon. Minister. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது பேசுவதற்கு ஒன்றுமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, may I request the Government to be kind enough to consult the Members representing the drought stricken area—irrespective of political considerations—and then draw up a tour programme so that it would facilitate the Prime Minister and her retinue to visit the entire drought-affected area of the State and have first-hand information about the whole area?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பசி, பஞ்சம், பட்டினியில் எந்த அரசியல் கட்சியும் இல்லை, கண்டிப்பாக நல்ல யோசனைதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகிறார்கள். அதற்குத்தான், அந்த காரியத்திற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. கண்டிப்பாக அந்த ஒத்துழைப்பையெல்லாம் பெற்றுத்தான் செய்யப்படும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறைகள்......